REGD: No. M. 6311 ★ தனி இதழ் 1 அணு ★ இலங்கையில் 10 சதம் ★ 'PHONE: 55630

நம் நாடு

தி.மு.க. தின இதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ✶ The Official Organ Of The D.P.F.

மலர் 2] சென்னை: வைகாசி 28உ சனி (11—6—55) ★ ★ வெளியீடு: வைகாசி 29உ ஞாயிறு (12—6—55) [இதழ் 309

சர்தார் பணிக்கருக்கு புதிய பதவி

புதுடில்லி, ஜூன் 10—

பல்கலைக் கழக மானியக் குழுவின் நிரந்தரத் தலைவராக சர்தார் கே. எம். பணிக்கர் நியமிக்கப்படலாம் எனத் தெரிகிறது.

குழுவின் தலைவராக இருந்த டாக்டர் எஸ். எஸ் பட்நாகர் காலமானபின் எவருக்கும் அந்தப் பதவி தரப்படாமலேயே இருக்கின்றது. மாநில புனரமைப்புக் குழுவில் அங்கம் வகிக்கும் பணிக்கர், பல்கலைக் கழக மானியக் குழுத் தலைவராக செப்டம்பர் திங்களுக்கு முன் பொறுப்பேற்க இயலாது என்றும் கூறப்படுகிறது.

ஆச்சாரியாரின் முகத்தில் கரி!

டாக்டர் பெஞ்சமினுக்குப் பதக்கம்!

காச நோய் தடுப்புச் சேவைக்காகத் தரப்படுகிறது

லண்டன், ஜூன் 10—

காசநோய் தடுப்புக்கான சர்வதேசச் சங்கத் தலைவரும், இந்திய சர்க்காரின் காசநோய் தடுப்பு ஆலோசகருமான டாக்டர் பி. பி. பெஞ்சமின், அந்த நோய்த் தடுப்பில் அவர் செய்துள்ள அரிய சேவைகளுக்காகப் பெருமைப்படுத்தப் படவிருக்கிறார்.

வரும் ஜூன் 21-ந் தேதியன்று இங்கு நடைபெற விருக்கும் 14-வது காமன்வெல்த் காசநோய் தடுப்பு மாநாட்டில் அவருக்கு, காசநோய் தடுப்புக்கான தேசிய சங்கம், 'பிலிப் பதக்கம்' தருவதென முடிவு செய்திருப்பதாகத் தெரிகிறது.

முதல் காசநோய் மருத்துவ நிலையத்தை நிறுவிய சர். ராபர்ட் பிலிப் என்பாரின் பெயரால் வழங்கப்படும் இந்தப் பரிசு, முதன் முதலாக டாக்டர் பெஞ்சமினுக்கு தரப்படுவதாகத் தெரிகிறது.

மதுரை நகர் கார்ப்பரேஷனாகிறது?

திருச்சி, ஜூன் 10—

இப்போது 'முனிசிபல்' நகரமாயிருக்கும் மதுரையை ஒரு 'கார்ப்பரேஷ'னாக மாற்ற சென்னை சர்க்கார் முடிவு செய்திருப்பதாகக் கூறப்படுகிறது. அதற்கான சட்டம் தயாரிப்பில் இருக்கிறதாம்.

மாநிலத்தில் தற்போது உள்ள ஒரே ஒரு 'கார்ப்பரேஷன்' சென்னை நகரம்தான்.

சிங்கப்பூர் துறைமுகத் தொழிலாளர் வேலை நிறுத்தம்

3,500 பேர் பங்கு பெறுகின்றனர்

சிங்கப்பூர், ஜூன் 9—

சிங்கப்பூர் துறைமுகத் தொழிலாளர்களில் 1,300 பேர் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டிருக்கின்றனர்.

வேலை நிறுத்தம் நீடித்தால், துறைமுக வேலைகள் நிலைநின்று விடக்கூடும் என்று அஞ்சப்படுகிறது.

மேலும் ஹ்யூம் தொழில்களுக்கான ஆலை, பயர்ஸ்டோன் ரப்பர் தொழிற்சாலை ஆகியவற்றிலும் சுமார் 2,000 தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் செய்கின்றனர் என்று தெரிகிறது.

மேலும், 40,000 தொழிலாளர்களின் பிரதிநிதித்துவம் பெற்ற வேறு பல தொழிற்சங்கங்களும், '48 மணி நேரத்திற்குள் துறைமுகத் தொழிலாளர் வேலை நிறுத்தத்திற்கு, சர்க்கார் பரிகாரம் தேடவேண்டும்' என எச்சரித்திருக்கின்றன.

இதற்கிடையில் சர்க்கார், வேலை நிறுத்தம் நடைபெறும் இடங்களில் சொற்பொழிவு நிகழ்த்துவதோ, கூட்டம் கூடுவதோ கூடாதெனவும், கூடுவோரைத் தடுக்குமாறும் போலீசாருக்கு உத்தரவிட்டிருப்பதாகவும் தெரியவருகிறது.

'பூஸ்வாமி சங்கத்'தவர் ஆர்ப்பாட்டம்!

160 பேர் கைது செய்யப்பட்டனராம்

போலீஸ் வண்டியின் கண்ணாடிக் கதவை உடைத்தனராம்!

ஜெய்ப்பூர், ஜூன் 10—

'பூஸ்வாமி சங்க' ஆர்ப்பாட்டக்காரர்கள், சர்க்கார் காரியாலயத்திற்குள் நுழைய முயன்றபோது தடுக்கப்பட்டு, அவர்களில் 160 பேர் போலீசாரால் கைது செய்யப்பட்டனர் என்று தெரிய வந்துள்ளது.

ஆர்ப்பாட்டக்காரர்களின் முதல் பகுதியினர், காலையில் சீக்கிரமாகவே சர்க்கார் காரியாலயத்திற்குள் நுழைய முயற்சித்தனர்; அவர்கள் 'மானெக்சௌக்' எனுமிடத்திலேயே தடுக்கப்பட்டனர்.

இரண்டாம் பிரிவினரும், 'சோட்டி சௌபாத்' எனுமிடத்தில் கைதாகினர்.

ஊர்வலமாக வந்த அந்த ஆர்ப்பாட்டக்காரர்கள், சர்க்கார் அலுவலகத்திற்குள் நுழைய முடியாது கைது செய்யப்பட்டதால் ஆத்திரமடைந்த சிலர், போலீஸ் வண்டி ஒன்றின் கண்ணாடிக் கதவை உடைத்தனர் என்றும் தெரிய வருகிறது.

பிரிட்டிஷ் இரயில் வேலை நிறுத்தம்

மக்கள் சபையில் விவாதம்

லண்டன், ஜூன் 9—

வேலை நிறுத்தத்திலீடுபட்டுள்ள இரயில்வே தொழிலாளர்களின் கூலி உயர்வுபற்றி நடைபெறும் பேச்சுவார்த்தைகள் முடிவதற்குள், தொழிலாளர் வேலைக்குத் திரும்பி விடவேண்டும் என்று எதிர்க்கட்சியினரின் பலத்த எதிர்ப்புக்கிடையே, புதிய மக்கள் சபைக் கூட்டத்தின் துவக்கத்தில் பிரதமர் அந்தோனி ஈடன் வற்புறுத்தியிருக்கிறார்.

"பேச்சு வார்த்தைகள் துவங்கு முன்பே தொழிலாளர்கள் வேலைக்குத் திரும்ப வேண்டுமென்பது புதியதொரு கோட்பாடாக இருக்கிறது; அந்தக் கோட்பாடு எப்படி நியாயமுடையது?"

—என, எதிர்க் கட்சித் தலைவர் அட்லி, அறைகூவியிருக்கிறார்.

தனது வானொலிப் பேச்சைத் தவறாகப் புரிந்துகொண்டிருப்பதாயும், ஏற்கனவே தொழிலாளர்கள் சம்பளம் பற்றிய பேச்சு வார்த்தைகள் துவங்கப்பட்டு விட்டன என்றும், அந்த பேச்சு வார்த்தைகள் முடிவுற்ற பின், தொடர்ந்து இதுபற்றி மக்கள் சபையில் பேசலாம் என்றும் அந்தோனி ஈடன் தெரிவித்திருக்கிறார்.

நவசாரி ஆலைத் தொழிலாளர் வேலை நிறுத்தம்

நவசாரி, ஜூன் 9—

இங்குள்ள மாபட்லால் ஆலையின் நூற்பு, நெய்தல் பிரிவுத் தொழிலாளர்கள், கடந்த செவ்வாய் முதல் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டுள்ளனர் என்று தெரியவருகிறது.

இதை ஒட்டி வரும் ஜூன் 21-ந் தேதி வரை எந்தவித ஆர்ப்பாட்டமும் நடக்கக் கூடாதென நகர நீதிபதி 144 தடையுத்தரவு விதித்திருப்பதாகத் தெரிகிறது.

பள்ளிக்கு வருகைதந்த கரடி!

பாலக்காடு, ஜூன் 10—

பரவச்சேரி எனும் கிராமத்தில் உள்ள ஆரம்பப்பள்ளி ஒன்றிற்கு, காட்டிலிருந்து தப்பிவந்த கரடி ஒன்று வருகை தந்ததாம்!

பள்ளியின் மூடியிருந்த அறைக் கதவு ஒன்றைத் திறக்க கரடி முயற்சித்திருக்கிறது.

இந்தச் சத்தம் கேட்ட பள்ளி ஆசிரியர்கள் வந்து பார்த்து திடுக்கிட்டு, திரும்பவும் தங்கள் வகுப்பு அறைக்குச் சென்று கதவைத் தாளிட்டுக் கொண்டனராம்.

பிறகு, கரடி சாவதானமாக பள்ளியைவிட்டு வெளியேறிச் சென்றது. செல்லும் வழியில், சின்னன் என்ற ஒருவரைப்பிடித்து பலமாகக் கடித்துக் காயப்படுத்திவிட்டு, தோட்டம் ஒன்றில் இளைப்பாறியதாம்!

அப்போது, வேலாயுதன் என்ற வேறு ஒரு தோழர், கரடியைச் சுட்டாராம்.

பெண்களை 'அடிமை கொண்டதாக' நிசாம் மீது வழக்கு!

ஐதராபாத் உயர் நீதிமன்றத் தீர்ப்பு

300 பெண்கள், 100 ஆண்கள், பல சிறுவர், சிறுமியர் ஆக பலரை, அவர்கள் விருப்பத்திற்கு மாறாகத் தன்னுடைய அரண்மனையில், ஐதராபாத் இராஜப்பிரமுகர் அடைத்து வைத்திருப்பதாக மாவட்ட மாஜிஸ்திரேட் கோர்ட்டில் வழக்கொன்று தொடுத்திருந்தார், பி. ஜி. கேஸ்கார் என்ற ஐதராபாத் வழக்கறிஞர்.

வழக்கை விசாரித்த மாஜிஸ்திரேட், இராஜப்பிரமுகரின் அரண்மனையை ஆராய்ந்து உண்மையை அறிவிக்குமாறு, போலீஸ் கமிஷனருக்குக் கட்டளை பிறப்பித்தார்.

அந்தக் கட்டளை, இந்திய அரசியல் சட்டம் 361(2) விதியின்படி இராஜப்பிரமுகரை கிரிமினல் நடவடிக்கைக்குள்ளாக்குவது கூடாது எனக் காரணங்காட்டி, மாவட்ட மாஜிஸ்திரேட்டின் கட்டளையை முறிக்க உத்தரவிடும்படி, ராஜப்பிரமுகரின் சார்பில், ஐதராபாத் உயர்நீதி மன்றத்தில் 'ரிவிஷன்மனு' கொடுக்கப்பட்டது.

மனுவை விசாரித்த உயர்நீதி மன்ற நீதிபதிகள் இருவரும், ஒரு ராஜப்பிரமுகருக்கு எதிராக, அவர் பதவி காலம் வரையில், கிரிமினல் நடவடிக்கை எடுப்பதற்கு இந்திய அரசியல் சட்டம் 361 (2) விதி அனுமதிக்கவில்லை என விளக்கிக் கூறி, அரண்மனையை சோதனையிடும்படி பிறப்பிக்கப்பட்டிருந்த மாஜிஸ்திரேட்டின் கட்டளை செல்லத்தக்கது அல்ல என உத்திரவிட்டு விட்டனர்.

கலைத்துவிட்டார்!

நேபாளத்தில் ஒரு ஆண்டிற்கு முன்னர் நிறுவப்பட்ட ஆலோசனை சபையை, நேபாள மன்னர் மகேந்திரா கலைத்துவிட்டாரெனத் தெரியவருகிறது.

சென்ற மாதம் இங்கு நடைபெற்ற அரசியல் மாநாட்டில், சபையைக் கலைத்துவிடவேண்டுமென யோசனை கூறப்பட்டது இங்கு குறிப்பிடத் தக்கது.

துணை நடிகைகள் வேலை நிறுத்தம்!

கோரிக்கை தினம் கொண்டாடி குறை தெரிவித்தனர்!

பம்பாய், ஜூன் 10—

நீசால பம்பாயைச் சேர்ந்த 500 துணை(எக்ஸ்ட்ரா)சினிமா நடிக நடிகைகளும், ஸ்டுடியோ சிப்பந்திகளும், 'கோரிக்கை தினம்' கொண்டாடி அடையாள வேலை நிறுத்தம் செய்திருக்கின்றனர். வேலை நிறுத்தம் செய்தவர்களில் சுமார் 200 பேர் பெண் நடிகர்களாம்!

இந்த வேலை நிறுத்தத்தின் காரணமாக 71 ஸ்டுடியோக்களில் வேலை நடைபெறாமல் போய்விட்டதாம்!

தங்களுடைய சங்கமான 'சினி ஆர்டிஸ்ட்' சங்கத்தை அங்கீகரிக்க வேண்டுமென்பதும், காலதாமதமில்லாமல் கூலி தரப்பட வேண்டும் என்பதும், சம்பள விகிதங்களை மாற்றி அமைப்பதுடன், சங்கத்தின் ஏஜெண்டுகள் மூலம் வரும் சிப்பந்திகள்தான் ஸ்டுடியோக்களில் அமர்த்தப்பட வேண்டுமென்பதும் வேலை நிறுத்தம் செய்யும் நடிகர்களின் கோரிக்கைகளாம்.

கழுதைப் புலிகளுக்கு 24 சிறுவர் பலி!

அலகாபாத் மாவட்டத்தில் உள்ள பூல்பூர் ஹாண்டியா தாலுகாவின் சில பகுதிகளில், கடந்த இரண்டு மாதங்களுக்குள்ளாக இரண்டு டஜன் குழந்தைகளை கழுதைப் புலிகள் கௌவிச் சென்றுவிட்டனவாம்.

இந்தக் கழுதைப் புலிகள் அப்பகுதியிலுள்ள ஆற்றங்கரைகளில் இருக்கும் சந்து பொந்துகளில் ஒளிந்துகொண்டிருக்குமெனவும் இராக்காலங்களில் அவை வெளிவந்து கண்ணில் அகப்பட்ட சிறுவர்களை அப்படியே தூக்கிச் சென்றுவிடுவதாகவும் கூறப்படுகிறது.

தற்போது இக்கழுதைப் புலிகளின் அட்டகாசங்களால் பயப்பட்டுக் கிடக்கும் அப்பகுதி மக்கள் மாலை அந்திநேரத்திற்குப் பின்னர் வீட்டைவிட்டு வெளியே வருவதே கிடையாதாம்.

நம் நாடு
தி.மு.க. தின இதழ் — ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்
சென்னை 11—6—'55 சனி

ஜனநாயகம் படும்பாடு

ஜனநாயகம் என்ற உயரிய அரசியல் தத்துவம், இந்த இந்தியத் துணைக் கண்டம் முழுவதும் ஆட்சிக் கொலுவில் வீற்றிருக்கும் காங்கிரஸ் ஆளவந்தார்களின் கையில் சிக்கிக்கொண்டு படாதபாடுபடுவதை, நாம் அவ்வப்போது எடுத்துக் காட்டி வந்திருக்கிறோம்.

இந்தியத் துணைக்கண்டத்தில் இணைக்கப்பட்டிருக்கிற பல்வேறு மாநிலங்களிலும், கடந்த எட்டு ஆண்டுகளாக, ஆளவந்தார்களாயிருந்தவர்களும் — இருந்து வருபவர்களுமான காங்கிரசாரின் செயல்களை ஒருசேர நோக்கினால், ஒவ்வொரு மாநிலத்தவரும் ஜனநாயகத்தை ஊறு செய்து, உருமாற்றும் கைங்கரியத்தில் பங்கு பெற்றவர்களாகவே இருப்பதை நேர்மையாளர்களால் தெளிவாகக் காண முடியும்,

விரும்பி ஏற்றுக்கொண்ட ஜனநாயக ஆட்சி முறையை மக்கள் தெளிவாகப் புரிந்து கொள்ளச் செய்து, அவர்களின் ஆதரவால் வளர்த்து வளம் பெறச் செய்ய வேண்டிய பெரும் பொறுப்பை, அந்த முறைப்படி ஆட்சியில் அமர்ந்த காங்கிரசார் உணர்ந்திருப்பதாகவே அவர்களின் கடந்த கால—நிகழ்கால நடைமுறைகள் நமக்குச் சொல்லவில்லை.

ஆச்சாரியார், மூன்றாண்டுகளுக்கு முன் ஆட்சியிலமர்ந்த நாள் முதல், வெளியேற்றப்பட்ட நாள்வரை, மேற்கொண்ட பலப்பல நடவடிக்கைகள், அவர், ஜனநாயக ஆட்சி முறைக்கு அவமானம் தேடிய ஒரு பெரிய மனிதர் என்பதை உலகுக்கு உணர்த்திக்கொண்டுதானிருந்தன.

சட்டசபையின் தீர்ப்பு, திட்டத்தை ஓராண்டிற்கு ஒத்திவைக்க வேண்டுமென்பது. அந்தத் தீர்ப்பு கட்டளை அல்ல,— வெறும் சிபாரிசுதான் என்று கூறிய ஆச்சாரியாரின் இறுமாப்பே, அவரைப் பற்றிய நமது வர்ணனை வரைகடந்ததல்ல என்பதை நிரூபிக்கும்.

அந்த 'குருநாதரி'ன் கீழ் நிதி, கல்வி இலாகாக்களின் மந்திரியாயிருந்த கனம் சுப்பிரமணியம் எந்த கல்வித் திட்டத்தை ஒரு வருட காலமாவது ஒத்திவைக்க வேண்டும் என்று சட்டசபை தீர்ப்புக் கூறியதோ அதே திட்டத்தை திரும்பப் பெற்றுக்கொண்டு சட்டசபையில் பேசியபோது, "திட்டத்திற்கு 'சபைக்குள்ளேயும், சபைக்குவெளியேயும்' எழுந்த எதிர்ப்புக்கு மதிப்பளித்து இந்தத் திட்டத்தையே திரும்பப்பெற்றுக்கொள்வதின் மூலம் சர்க்கார் ஜனநாயகத்தில் கொண்டுள்ள நம்பிக்கையை உறுதி செய்து கொள்கிறது என்று கூறினர்.

இந்த 'கனம்'தான், ஆச்சாரியார் முதன் மந்திரியாயிருந்த காலத்திலும், அவரது திருக்கல்யாணகுண நலன்கள் பற்றி கதா காலட்சேபம் செய்யும் மந்திரியாகவும் இருந்திருக்கிறார்.

அப்போது இந்த மந்திரியாருக்குத் தனது 'குருநாதரி'ன் போக்கு ஜனநாயக பாரம்பரியத்திற்கு முரணானது மட்டுமல்ல—ஜனநாயகப் போர்வையில் வேரூன்ற நினைத்த சர்வாதிகாரப் போக்கு என்பதை ஏனோ உணர்ந்துகொள்ள முடியாது போயிற்று?

உணர்ந்து கொண்டாலும், ஜனநாயகம் என்ற தத்துவத் திறகே, 'சக்ரவர்த்தித் திருமகன்' போன்ற புதுப்புது 'கம்ப இராமாயண' விளக்கம் தர முற்பட்டனர்.

"அவர்கள் மட்டுமல்ல ஜனநாயகத்தைப் படாதபாடு படுத்துபவர்கள்; நாங்களும் கூடத்தான்"—என்று கூறும் காங்கிரஸ் மந்திரிகளின் பட்டியல், மாநிலவாரியாகத் தயாரிக்கப்பட முடியும்.

அந்தப் பட்டியலில் இடம் பெறுபவராக, பஞ்சாப் மாநில முதன் மந்திரி பீம்சேன் சச்சாரின் நடவடிக்கைகள் இருந்து வருகின்றன.

'சீக்கிய நாடு சீக்கியருக்கே' என்ற மூல முழக்கத்தை உள்ளடக்கியது என வடநாட்டு அரசியல் வாதிகள் அஞ்சி அஞ்சிச் செத்துக் கொண்டிருக்கிற பஞ்சாப் மொழி வழி மாநிலம் அமைக்க வேண்டும்' என்று சீக்கியர்கள் எழுப்பும் உரிமைக் குரலுக்கு பஞ்சாப் சர்க்கார் தடை விதித்திருப்பது பற்றியும், அந்தத் தடையை உடைத்தெறிய மாஸ்டர் தாரா சிங்கின் தலைமையில் உள்ள அகாலி தளத்தவர், கடந்த ஒரு மாத காலமாக நடத்திவரும் உரிமைக் கிளர்ச்சி பற்றியும், நாம் முன்பே எழுதியிருக்கிறோம்.

"'தடையை நீக்கும்வரை கிளர்ச்சியில் ஈடுபடுவோம்'— 'பஞ்சாப் மொழி வழி மாநிலம் வேண்டும்' எனக் குரல் எழுப்புவது சீக்கியரின் அடிப்படை உரிமை; அந்த உரிமை பறி போகாமல் பார்த்துக்கொள்வது எங்கள் கடமை; அந்தக் கடமையை நிறைவேற்றுவதற்குத் தடைகள் விதிக்கப்பட்டால் தாள மாட்டோம்— ஆளவந்தார்களின் அடக்குமுறை எங்களை ஏதும் செய்துவிடாது!" — என்று கூறி போரில் ஈடுபட்டுள்ளனர் அகாலிதளத்தவர். ஒரு மாதமாகக் கிளர்ச்சி நடைபெற்று வருகிறது அமைதியாகவே. தினம் தினம் பலர் கைது செய்யப்படுகின்றனர். இதுவரை இரண்டாயிரத்திற்கும் அதிகமான பேர் கைதாகியுள்ளனர்.

கிளர்ச்சி ஏன்?—இந்தக் கிளர்ச்சிக்காரர்களில் இரண்டாயிரம் பேர் சிறைப்படுகிறார்கள் என்றால் அது என்ன சாமானியமான கிளர்ச்சியா? —இத்தனை பேருக்கும், தடையை உடைக்கும் படையில் இடம் பெற்று, அடக்குமுறைக்கு இரையாகி, சிறை செல்லவுமான உள்ள உரம் ஊட்டும் ஆற்றல்தான் எது?— அவர்களின் இலட்சியம்தான் என்ன?—என்று சிந்தித்து, அவர்களின் இலட்சியம் குறித்து நியாயமான கருத்தைத் தரக் கடமைப்பட்டிருக்கும் முதன் மந்திரி பீம்சேன் சச்சார்— காங்கிரஸ்காரர்தான் கூறியிருக்கிறார்:—

"சிறையில் நிரம்ப இடம் இருக்கிறது; அவர்கள் எத்தனை தூரம் செல்ல முடியுமோ அவ்வளவு தூரம் செல்லட்டும்; சர்க்கார் தொடர்ந்து அவர்கள் மீது நடவடிக்கை எடுத்தே தீரும்"—என்று!

அவரது பேச்சு, ஜனநாயகத்திற்குத் தரப்படும் எந்த ஒரு விபரீதமான விளக்கத்திற்கும் கூடப் பொருந்திவரக் கூடியதாயில்லையே? "சிறையில் நிரம்ப இடம் இருக்கிறது" என்ற வாசகங்கள், ஜனநாயக முறைப்படி ஆட்சியிலமருவோர் கூறக்கூடியதுதானா என்பதை ஜனநாயகத்தைப் படாத பாடு படுத்தும் இந்த காங்கிரஸ் ஆளவந்தார்களல்ல — ஜனநாயக வளர்ச்சியில் உண்மையிலேயே நாணயமான நம்பிக்கையும், பற்றும் கொண்டவர்கள் சற்று சிந்திக்கவேண்டுவது அவசியம் எனக் கேட்டுக் கொள்கிறோம்.

பல் துலக்கும் மின்சார பிரஷ்!

டோக்கியோ, ஜூன் 9—
பற் சிதைவைத் தடுப்பதில் மிக சக்தி வாய்ந்ததாக இருப்பதாகக் கூறப்படும் 'மின்சார பல் துலக்கும் பிரஷ்' ஒன்று, டோக்கியோ கல்லூரி சோதனைச்சாலை ஒன்றில் கண்டு பிடிக்கப்பட்டிருக்கிறது.

வேறு சாதாரண 'பிரஷ்'களைப் போலவே காணப்படும் இந்த 'பிரஷ்' நுனி, ஒரு மின்சார 'பாட்டரி'யுடன் இணைக்கப்பட்டிருக்கும் என்று தெரிகிறது.

இந்த மாதிரி 'மின்சார பிரஷ்'களை பெரும் அளவில் உற்பத்தி செய்ய ஒரு கம்பெனி முற்படும் என்றும் தெரிகிறது.

பஞ்சாப் மாநில நிர்வாக ஊழல்கள்

ஆராய விசாரணைக்குழு வேண்டும்

அகாலிதளத் துணைத் தலைவர் கோரிக்கை

புதுடில்லி, ஜூன் 9—
'பஞ்சாபில் நிர்வாக முறை பற்றி விசாரணை நடத்தி அதில் நிலவும் வகுப்புவாதம், இலஞ்சம், ஓரவஞ்சனை ஆகிய தீமைகளை ஒழிக்க வழிவகை காணவேண்டும்," என்று சிரோமணி அகாலி தளத் துணைத் தலைவரும், மக்கள் சபை உருப்பினருமான சர்தார் பகதூர் சிங் என்பவர் குறிப்பிட்டிருக்கிறார்

★

'நீதிமன்ற விசாரணை வேண்டும்'

'காங்கிரஸ் தந்த தீர்ப்பு போதாது'

லஞ்சக்குற்றத்திற்காளான ஜகத் நாராயண் விஷயம்

"......ஜகத் நாராயண் விஷயத்தில் காங்கிரஸ் மேலிடம், 'குற்றமற்றவர்' எனத் தீர்ப்பு வழங்கியிருப்பது குடும்பத் தலைவர் தட்டிக்கொடுப்பதைப்போல்தான் இருக்கிறது.

"......காங்கிரஸ் மேலிடம் ஒரு நீதிமன்றமல்ல—தீர்ப்பு வழங்குவதற்கு

"......சுமத்தப்பட்ட குற்றங்களின் தரம் பற்றி கருத்தறிவிப்பது, குற்றம்சுமத்தியவர்களுக்கோ, ஜகத் நாராயணனுக்கோ அழகல்ல

"......ஜகத் நாராயணன் குற்றவாளியா அல்லது அவர் மீது குற்றம் சுமத்துவர்கள், அதிகாரப் பசி கொண்டலைபவர்களா என்பதை குறித்து சட்ட ரீதியாகத் தரப்படும் தீர்ப்பு மட்டும்தான், மக்களைத் திருப்தி படுத்தமுடியும்.

"......ஒருவர் யோசனை கூறியிருப்பதைப்போல, "தலைவர்கள் தங்களிடையேயுள்ள வேறுபாடுகளை மறந்து விடுவது மட்டும் போதாது.

"......மக்கள் உண்மையறிய விரும்புகின்றனர்," என்று ஜஸ்வர்த்தி சிங் என்ற ஒரு தோழர், பம்பாயிலிருந்து வரும் 'டைம்ஸ் ஆப் இந்தியா'வில் எழுதியுள்ள கடிதம் ஒன்றில் குறிப்பிட்டிருக்கிறார்.

'கிருஷ்ணமேனன் ஒரு அமெரிக்க விரோதி'

அமெரிக்க ஜனநாயகவாதியின் வர்ணனை

வாஷிங்டன், ஜூன் 8—
"வி. கே. கிருஷ்ணமேனன் ஒரு முரட்டுத்தனமான அமெரிக்க விரோதி."

"சீனாவுக்கும் அமெரிக்காவுக்குமிடையில் சமரச தூதுவராக அவர் மீது நாம் அதிக நம்பிக்கை வைப்பது நாம் வினையந்தெரியாதவர்கள் எனக் காட்டக்கூடும்" என்று, ஜனநாயகவாதியும் அமெரிக்க மக்கள் சபையின் வெளிவிவகாரக் குழுத் தலைவருமான ஜேம்ஸ் ரிச்சர்ட்ஸ் என்பவர் கூறியிருக்கிறார்.

"மேனன் ஒரு கம்யூனிஸ்டாக இல்லாவிடினும், கம்யூனிஸ்டுகளைக் காட்டிலும், கம்யூனிஸ்டுகளின் கொள்கை பற்றித் திறமையாகப் பேசுகிறார்.

"ஐ. நா. சபையில் நான் மேனனது போக்கைக் கவனித்து வந்திருக்கிறேன்.

"ரஷ்யாவுக்கும் இதர நாடுகளுக்குமிடையே எழுந்த எந்த ஒரு பிரச்சினையிலும் அவர், நூற்றுக்கு நூறு கம்யூனிஸ்டுகளுக்காகவே பேசி வந்திருக்கிறார். அதிலிருந்து விலகியதே இல்லை" என்றும் அந்த அமெரிக்க ஜனநாயகவாதி தெரிவித்திருக்கிறார்.

உலகப் பெரிய மாளிகை

நியூயார்க், ஜூன் 8—
நியூயார்க்கில் உள்ள பென்சில்வேனியா பகுதியில், ஒன்பது ஏகர் நிலப் பரப்பில், 10 கோடி டாலர் செலவில் உலகிலேயே மிகப் பெரியதும் அதிக விலையானதுமான மாளிகை ஒன்று அமைக்கப்படவிருப்பதாகத் தெரிகிறது.

இப்போது உலகத்தின் மிகப் பெரிய மாளிகையாயிருக்கும் 'எம்பயர் ஸ்டேட்' மாளிகையின் இடவசதியைப் போன்று மூன்று மடங்கு வசதி படைத்ததாக, புதிய மாளிகை இருக்குமெனத் தெரிகிறது.

"முன்னேற்ற மாளிகை" என்று நிறுவப்படவிருக்கும் மாளிகையை வர்ணிக்கிறார்கள்.

அந்த மாளிகையில், வெளிநாடுகள் பலவற்றின் நிரந்தரமான காட்சிப் பொருள்கள் விற்பனைக்கான சந்தை அமையும் என்றும், வெளிநாட்டு வர்த்தக நிறுவனங்கள் அங்கு இடம் தேடிக் கொள்ளலாம் என்றும் கூறப்படுகிறது.

'குடியரசு சர்க்கார்' பிரகடனம்!

பிரதமருக்கு 6 - ஆண்டு சிறைவாசம்

டச்சு இராணுவத்தின் தூண்டுதல்?

ஜகார்தா, ஜூன் 10—
தெற்கு மொலூக்கஸ், ஒரு 'குடியரசு சர்க்கார்' என்று தங்களுக்குத் தாங்களே பிரகடனம் செய்து கொண்ட மொலூக்கசின் 12 மந்திரிகளுக்கும் இந்தோனேஷியா இராணுவ நீதிமன்றம் 3 ஆண்டுகள் முதல் 10 ஆண்டுகள் வரையிலும் சிறைத் தண்டனை விதித்துத் தீர்ப்பளித்திருக்கிறது.

'பிரதம மந்திரி'க்கு 6 ஆண்டு சிறைத் தண்டனை விதிக்கப்பட்டிருக்கிறது.

முன்னைய டச்சு இராணுவத்தினரின் தூண்டுதலின் பேரிலேயே தாங்கள் அவ்வாறு நடந்து கொண்டதாகக் குற்றத்தை ஒப்புக்கொண்ட அவர்களில் பலர் தெரிவித்திருக்கின்றனராம்.

தண்டனை பெற்ற இவர்களில் பலர் அண்மையிலேயே விடுதலையடைந்து விடுவர் என்று கூறப்பட்டிருக்கிறது; ஏற்கனவே பல ஆண்டுகளாக காவலில் அவர்கள் இருந்த காலத்தை தண்டனையில் கழித்துக் கொள்வதென முடிவு செய்யப்பட்டிருக்கிறதாம்.

தென் மொலூக்கஸ் மக்கள் தங்கள் நாட்டை குடியரசு நாடாகப் பிரகடனம் செய்துகொள்ள உரிமை உண்டென்றும், எனவே வழக்கை அகில உலக நீதிமன்றத்திற்கு விடவேண்டுமென்றும் எதிரிகள் சார்பில் வாதாடிய டச்சு வழக்கறிஞர் வாதத்தை இராணுவ நீதி மன்றம் ஏற்றுக்கொள்ளவில்லையாம்.

மத்திய சினிமா தணிக்கைக் குழு

1954-ம் ஆண்டில் புரிந்த பணி

பம்பாய், ஜூன் 9—
1954-ம் ஆண்டில், மத்திய சினிமா தணிக்கை 'போர்டார்' 279 இந்திய படங்களையும், 235 வெளிநாட்டுப் படங்களையும் தணிக்கை செய்திருக்கின்றனர் என்று, போர்டின் அறிக்கை ஒன்று கூறுகிறது.

38 வெளிநாட்டுப் படங்களுக்கு, திரையிடும் அனுமதி மறுக்கப்பட்டது என்றும், இந்தியப் படங்கள் எதற்கும் திரையிடும் அனுமதி மறுக்கப்படவில்லை என்றும் கூறப்பட்டுள்ளது.

அனுமதி மறுக்கப்பட்ட 38 படங்களில், 25 படங்கள் பலாத்கார சம்பவங்களும், குற்றங்கள் நிறைந்ததாயுமிருந்ததாலும், 6 படங்கள் வெளி வல்லரசுகளுக்கு எதிரான பிரசாரமடங்கியதாக இருந்தமையாலும், எஞ்சிய ஏழு படங்கள், 'நாகரீகம்' கருதியும் திரையிட அனுமதி மறுக்கப்பட்டன

கடந்த ஆண்டு தணிக்கை செய்யப்பட்ட 279 படங்களில் 120 படங்கள் இந்தி, 48 படங்கள் வங்காளி, 40 தமிழ், 27 தெலுங்கு, 18 மராத்தி, 10 கன்னடம், 8 மலையாளம், 3 ஆங்கிலம், 3 பஞ்சாபி, 1 அசாமி, 1 ஒரியா ஆகிய மொழிகளில் இருந்தன.

இவைகளில் 96 படங்கள் எவ்வித ஆட்சேபமும் இன்றியும், 183 படங்களில் சில காட்சிகள் வெட்டப்பட்டும் திரையிட அனுமதிக்கப்பட்டன.

'இந்திப் பிரியர்'கள் வெறி!

முற்றிவிடுமோ என்று அபுல்கலாம் ஆசாத் அச்சம்?

பொறுப்பு ஒப்படைத்தலில் மாற்றம் ஏன்?

புதுடில்லி, ஜூன் 7—

"லண்டனுக்குச் சென்றிருக்கும் மத்திய சர்க்கார் கல்வி மந்திரி மௌலானா அபுல் கலாம் ஆசாத், தமது இலாகாவில் ஒரு துணை மந்திரி இருந்தும், மற்றொரு முஸ்லீம் மந்திரியிடம் தமது பொறுப்பை தற்காலிகமாக ஒப்படைத்திருப்பது இங்குள்ளோரிடையே சிறிது மன அமைதிக் குறைவை ஏற்படுத்தியுள்ளது.

இராஜஸ்தான் பல்கலைக் கழகத்தின் துணை-வேந்தராக இருந்தவரும், பார்லிமெண்டரி காரியதரிசியாக இருந்தவரும், தற்பொழுது கல்வி இலாகாவின் துணை மந்திரியாக இருப்பவரிடம் பொறுப்பை ஒப்படைக்காமல், வெளிவிவகார இலாகாவைச் சேர்ந்த முஸ்லீம் மந்திரியிடம் ஒப்படைத்திருப்பது பலருக்கு அதிருப்தியை உண்டு பண்ணியிருக்கிறது

இந்தியாவின் பழங்கால இலக்கியங்கள் லண்டன் மியூசியத்தில் உள்ளன; அவைகளைத் திரும்பிப் பெறுவது விஷயமாகப் பேச்சு வார்த்தை நடத்தவே அவர் லண்டன் சென்றிருக்கிறார். அந்த இடைக்காலத்திற்கு வெளி விவகார இலாகாவிலுள்ள மந்திரி டாக்டர் சையத் முகமதிடம் பொறுப்பை ஒப்படைத்திருக்கிறார். கல்வி இலாகா துணை மந்திரிதான், கல்வி மந்திரி இல்லாதபோது அவரது அலுவல்களை உடனுக்குடன் செய்துவர வேண்டுமென்பது சாதாரண ஏற்பாடாகும்.

இந்த மாற்றத்தால் இங்கு ஒருவிதமான 'நட்புக் குறைவு' மனப்பான்மை பரந்துள்ளது.

'இந்திப் பிரியர்கள்' தாம் இல்லாதபோது, தமது திட்டங்கள் எதையாவது கொட்டிக் கவிழ்த்துவிடக் கூடாதென்ற சந்தேகத்தின் பேரில் தான் மௌலானா ஆசாத் இப்படிச் செய்திருக்க வேண்டுமென்று இந்திய சர்க்கார் உயர்தர வட்டாரத்தினர் அபிப்பிராயப்படுகின்றனர். எனவேதான், அவர் தமது துணை மந்திரியிடம் பொறுப்பைக் கொடுக்காமலிருந்திருக்கக்கூடும் என சந்தேகப்பட வேண்டியதாகிறது. அதுவும், தாம் ஒரு முஸ்லீமாக இருந்து மற்றொரு முஸ்லீமிடம் பதவியை ஒப்படைத்திருக்கிறார் என்பது அர்த்தபுஷ்டியாகக் கருதப்படுகிறது.,, —'தின மலர்'

யோசனையைத் 'துறந்து'விட்டாராம்!

பிரிட்டிஷ் பார்லிமெண்டரி தொழிற்கட்சியினரின் 'ஒருமித்த' வேண்டுகோளுக்கிணங்க, அக்கட்சியின் தலைவரான அட்லி, தமது பதவியைத் துறக்க முடிவு செய்திருந்த யோசனையைத் 'துறந்து' விட்டார் என்று பத்திரிகைச் செய்தி ஒன்றின் மூலம் தெரிகிறது.

திருப்பதியில் விமான நிலையம் கட்ட திட்டம்

திருப்பதியில் ஒரு விமான நிலையம் கட்டுவதற்கான திட்டங்களை அங்குள்ள அதிகாரிகள் ஆந்திர சர்க்காரிடம் சமர்ப்பித்துள்ளனராம்.

இத்திட்டம், இந்திய சர்க்காரின் இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் இடம் பெறலாமாம்.

நாளொரு கணக்கும் பொழுதொரு பேச்சுமா?

துப்பாக்கிப் பிரயோகத்திற்கு பலியானவர் எண்ணிக்கை?

திரு—த. நா. காங்கிரஸ் தலைவர் நேசமணி தகவல்

"சென்ற ஆண்டு ஆகஸ்டு திங்களில் திரு-கொச்சி மாநிலத்தில் நடைபெற்ற திரு-தமிழக இணைப்புப் போராட்டத்தின் போது நாகர்கோவிலில் நிவாரண முகாம் ஒன்று திறக்கப்பட்டு, அங்கு 29 பேருக்குச் சிகிச்சை அளிக்கப்பட்டு வந்தது; அவர்களில் இன்னும் முழுமையுமாகக் குணமடையாதவர்களுக்கு தற்போதும் தொடர்ந்து சிகிச்சைகள் அளிக்கப்பட்டு வருகின்றன; இவர்களைத் தவிர மேலும் 43 பேர்களுக்கு நாகர்கோவிலிலுள்ள மற்ற மருத்துவர்கள்மூலம் சிகிச்சைகள் செய்யப்பட்டு வருகின்றன. இந்தக் கணக்குகளை வைத்துக்கொண்டு பார்க்குமிடத்து, இப்போராட்டத்தில் பங்கு பெற்றுக்கொண்டதின் விளைவாக மொத்தம் 123 பேர் மருத்துவ சிகிச்சை பெற்றுவருகிறார்கள்; இந்த இரு சாராரையும் நீங்கலாக மற்றும் சிலர் தாங்களாகவே மருத்துவர்களிடம் சிகிச்சை பெற்றுவருகின்றனர்."

"கிடைத்துள்ள தகவல்களின்படி துப்பாக்கிப் பிரயோகத்தில் 8 பேர் உயிர் துறந்திருப்பதாகத் தெரிகிறது. அவர்களது குடும்பங்களுக்கும், உறுப்புக்களை இழந்த 12 பேர்களுக்கும் நிவாரண உதவி அளிக்க சர்க்காரிடம் கோரிக்கை தரப்பட்டிருக்கிறது."

மேற்குறிப்பிட்டுள்ள இத்தகவல்களை, திரு—தமிழ் நாட்டு காங்கிரஸ் தலைவர் ஏ நேசமணி, மார்த்தாண்டத்தில் நடைபெற்ற தி. த. நா. கா. பொதுக்குழுக் கூட்டத்தில் பேசுகையில் வெளியிட்டிருக்கிறார்.

[துப்பாக்கிப் பிரயோகத்தில் உயிர் துறந்தவர் எண்ணிக்கை ஏழு தான் என்று சர்க்கார் தரப்பில் கூறப்பட்டிருப்பதும், அதில் நான்கு பேர்களின் குடும்பங்களுக்குத்தான் நிவாரண உதவி அளிக்கப்பட்டிருக்கிறது என்றும் முன்னர் அறிவிக்கப்பட்டதும் குறிப்பிடத்தக்கது.]

ஒப்புக் கொண்டதாம்!

அண்மையில் நடைபெற இருக்கும் நான்கு வல்லரசுகளின் அதிபர்கள் மாநாட்டை நடத்துவதற்கென மேற்கு நாடுகள் குறிப்பிட்ட இடத்தையும், நாளையும் சோவியத் ரஷ்யா ஏற்றுக்கொள்ளும் என்று தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

அடுத்த திங்கள் 18-ந் தேதி முதல் 21-ந் தேதி வரையிலும் இந்த மாநாட்டை ஜெனீவாவில் நடத்த வேண்டுமென்பதே மேற்கத்திய நாடுகளின் நோக்கமாகும். இதுபற்றி நான்கு வல்லரசுகளின் அயல்நாட்டமைச்சர்களும் சான் பிரான்சிஸ்கோவில் கூடி இறுதி முடிவு மேற்கொள்ள இருக்கின்றனராம்.

அச்சம் அகலுமாம்!

"ஜெனீவா நால்வர் மாநாடு அகில உலக நெருக்கடியைத் தணிக்கும் 'முதல் நடவடிக்கை' யாக இருக்கும்; அது மக்கள் மனத்திலிருந்து வரும் பயந்த மனப்பான்மையை உண்மையிலேயே நீக்கிவிடும்,"

என்று பிரிட்டிஷ் பிரதமர் சர். அந்தோனி ஈடன், காமன்ஸ் சபைக்கூட்டத்தில்கூறியிருக்கிறார்.

எகிப்துக்கு பிரிட்டனின் கண்டனக் குறிப்பு

சூடான் பிரச்சினையில் தலையிடுவதாகக் குற்றச்சாட்டு

சூடான் மக்கள் தங்கள் அரசியல் எதிர்காலத்தை சுதந்திரமாக நிர்ணயித்துக் கொள்வதில் குறுக்கிடும் வகையில், எகிப்தின் சில நடவடிக்கைகள் இருப்பதாக பிரிட்டன் குற்றம் சாட்டி, அந்த நடவடிக்கைகளை எதிர்த்து கண்டனக் குறிப்பொன்றை இங்கிலாந்தில் உள்ள எகிப்தியத் தூதுவரிடம் இங்கிலாந்து இராஜாங்க இலாகா மந்திரி தந்திருக்கிறாராம்.

சூடான் கவர்னர்-ஜெனரலின் 'கமிஷனி'ல் அங்கம் வகிக்கும் ஜல்பீகுவார் என்பவர், 'அல் முஸ்வா வா' என்ற கெய்ரோ வார இதழில் தந்துள்ள அறிக்கையை, குறிப்பிட்ட ஒரு சம்பவமாக பிரிட்டன் சுட்டிக்காட்டியிருக்கிறதாம்.

'சூடான் தேர்ந்தெடுத்துக்கொள்ளக் கூடிய மூன்று வகைச் சுதந்திரங்கள் உண்டு,' என்று அந்த அறிக்கையில் கூறப்பட்டிருந்ததாம்.

முதலாவதாக, 'ஒதுங்கி நிற்கும் சுதந்திரம்'—எகிப்திய கருத்துப்படி—காலனி ஆதிக்கம் செலுத்தும் வல்லரசுகளின் பேராசைக்கு சூடான் இரையாகும்.

இரண்டாவதாக 'பிரிவினை சுதந்திரம்,' வெளிநாட்டு பொருளாதார அரசியல் ஆதிக்கத்தில் சூடானை இணைத்துவிடும்.

மூன்றாவதான 'உண்மைச் சுதந்திரம்' எகிப்துடன் அரசியல் ரீதியாக இணைந்த பாதுகாப்புத் தரும்.

"இந்தக் கருத்துக்களடங்கிய அறிக்கை, சூடான் மக்கள் தங்கள் கால அரசியலை சுதந்திரமாகத் தேர்ந்தெடுத்து நிர்ணயம் செய்வதற்கான உரிமையில் குறுக்கிடுவதாக உள்ளது," என்று இங்கிலாந்தின் கண்டனக் குறிப்பு கூறுகிறது.

1953-ல் கையெழுத்தான ஆங்கிலோ - எகிப்திய ஒப்பந்தம், மேற்கண்டவாறான நடவடிக்கைகளில் ஈடுபடுவதை குறிப்பாகத் தடை செய்கிறது.

தங்களின் அரசியல் திட்டத்தை சூடான் மக்கள் நிர்ணயித்துக் கொள்வதற்கான காலம் வரையறுக்கப்படவில்லை.

இப்போது நடைபெற்று வரும், உத்தியோகங்களை சூடானியர் மயமாக்கும் காரியம் பூர்த்தியானதும், மக்கள் சபை, அரசியல் நிர்ணய சபை கூடுவதற்கான ஏற்பாடுகளைச் செய்ய வேண்டுமென 1953-ம் வருட ஒப்பந்தம் கூறுகிறது.

இந்த ஆண்டு ஜூலை, ஆகஸ்டுக்குள் அந்தக் காரியம் முடியக் கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது. எனவே, அதன்பின், அரசியல் நிர்ணய சபைக்கான தேர்தலை நடத்தவேண்டிய விஷயம் சூடான் மக்கள் சபையைப் பொறுத்ததாகும்.

கழகச் செய்திகள்

சென்னை 37-வது வட்ட தி. மு. கழகம்

4—6—55 இரவு 9 மணிக்கு, சென்னை 37-வது வட்டம் இராயப்பேட்டை கழகப் பணி மனையில் தோழர் கோ. இளவரசு தலைமையில் நடைபெற்ற கழகச் செயற்குழுக் கூட்டத்தில் முன்னாள் பொதுச் செயலாளர் அண்ணா, பொதுக் குழு உறுப்பினர்கள், மாவட்டச் செயலாளர் தோழர் கே. எம். கண்ணபிரான் ஆகியோருக்கு நன்றியறிதலும், புதிய பொதுச் செயலாளர் இரா. நெடுஞ்செழியன், பொதுக் குழு உறுப்பினர்கள், மாவட்டச் செயலாளர் இளம்பரிதி ஆகியோருக்குப் பாராட்டும் தெரிவித்துக்கொண்டதுடன், இராயப்பேட்டை வட்டத்திலுள்ள பொதுமக்களுக்கு கழகக் கொள்கைகளை மேனமேலும் விளக்கும் முகத்தான் வாரத்திற்கொருமுறை சுவரொட்டிகள் மூலம் விளக்கம் கொடுப்பதென முடிவு செய்ததுடன், கழக வரவு—செலவு சரிபார்க்கப்பட்டு ஒப்புக் கொள்ளப்பட்டது; மற்றும் பல தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டன.

சத்தியவிஜயநகரம் தி. மு. கழகம்

28—5—55 இரவு 8 மணிக்கு தோழர் மு. ந. இராமன் தலைமையில் கழக மனையில் நடைபெற்ற செயற்குழு கூட்டத்தில், முன்னாள் பொதுச் செயலாளர் அண்ணாதுரை, வட ஆற்காடு மாவட்டச் செயலாளர் ஏ. எல். சி கிருஷ்ணசாமி ஆகியோருக்கு நன்றியும், புதிய பொதுச் செயலாளர் இரா. நெடுஞ்செழியன், மாவட்டச் செயலாளர் முல்லை-சத்தி ஆகியோருக்குப்பாராட்டும்தெரிவித்துக்கொண்டும், பிரதி திங்களும் முழு நிலவு அன்று கடைவீதியில் கழகப் பொதுக் கூட்டமும், வாரந்தோறும் வியாழக்கிழமைகளில் கழக மனையில் சொற்பயிற்சிக் கூட்டம் நடத்தவேண்டுமென தீர்மானிக்கப்பட்டது. இறுதியில் இம்மாதக் கடைசி வாரத்திலாவது வட ஆற்காடு மாவட்டச்செயலாளர் தோழர் முல்லை-சத்தி அவர்களுக்கு நகர தி. மு. கழகச் சார்பில் வரவேற்புத் தருவதெனவும் முடிவு செய்யப்பட்டது.

மூணார் தி. மு. கழக (கிளை)

"மூணார் தி. மு. க. கிளைச் செயலாளர் தோழர் ஜே. டேவிட் அவர்கள் செயலாளர் பொறுப்பிலிருந்து கொண்டு கழகச் செயலாற்றும் பணிக்கு தமக்குச் சந்தர்ப்பம், சூழ்நிலை இவை இணைந்து வராத காரணத்தால் தமது கழகப் பொறுப்பினின்றும் 11—5—55 முதல் விலகிக்கொண்டார். அதன் காரணமாகத் தற்பொழுது துணைச் செயலாளர் தோழர் எம். பி ஜான் அவர்கள் வசம் செயலாளர் பொறுப்பு ஒப்புவிக்கப்பட்டிருக்கின்றது," என்று மூணார் தி. மு. கழக கிளைக் குழு அறிவித்துக் கொள்கிறது.

அணுசக்தி ஆயுத உற்பத்தி அதிகரிக்கும்

ரூ. 129 கோடி செலவாகும்

அமெரிக்க சர்க்கார், வருகிற ஜூலை திங்கள் முதல் தேதி தொட்டு ஆரம்பமாகும் அடுத்த நிதி ஆண்டில், 27,10,00,000 டாலர் (சுமார் 129 கோடி ரூபாய்) திட்டத்தின் ஒரு பகுதியாக அணுசக்தி ஆயுதங்களின் உற்பத்தியை அதிகரிக்கும் என்று தெரிகிறது.

இதுதவிர, அணுசக்தியால் இயக்கப்பெறும் விமானத்தையும்தயாரிக்குமெனவும், ஆயுத உற்பத்திக்காக 30 சதவிகித அதிக நிதி ஒதுக்கும்படி அணுசக்திக் குழு அதிகாரிகள் கேட்டுக் கொண்டுள்ளதாகவும் தெரியவருகிறது.

சென்னை—சைதை தி. மு. கழகம்

22—5—55 மாலை 7 மணிக்கு கழக இல்லத்தில் நடைபெற்ற செயற் குழுக் கூட்டத்தில் இத்திங்கள் இறுதிக்குள் கழகச் சார்பில் ஒரு பொதுக் கூட்டம் நடத்துவதென்று தீர்மானிக்கப்பட்டது.

பொன்னேரி வட்ட தி. மு. கழகம்

5—6—55 பிற்பகல், பொன்னேரி தி. மு. கழக வட்டக் குழுக் கூட்டம் தோழர் ப. செ. தூயமணி தலைமையில் நடைபெற்றபோது, முன்னாள் பொதுச் செயலாளர் அண்ணாதுரை, செங்கற்பட்டு மாவட்டச்செயலாளர் சி. வி. எம். அண்ணாமலை ஆகியோருக்கு நன்றியும், புதிய பொதுச் செயலாளர் இரா. நெடுஞ்செழியன், மாவட்டச் செயலாளர் கே. டி. எஸ். மணி ஆகியோருக்குப் பாராட்டும் தெரிவித்துக் கொண்டு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. மாநில மாநாட்டு நிதிக்காக பொன்னேரி வட்டத்தைச் சேர்ந்த கும்மிடிபூண்டி ரூ. 15, புதுகும்மிடிபூண்டி ரூ.10, பொன்னேரி ரூ.15, ஆரணி ரூ. 10, மேலூர் ரூ. 15, மீஞ்சூர் ரூ. 20, சத்தியவேடு ரூ 10-ம் தருவதாக வாக்களித்துள்ளன.

பின்னர், 'நம் நாடு' இதழை எல்லா கிளைக் கழகங்களும் சந்தா செலுத்தி வாங்குமாறு வற்புறுத்திக் கேட்டுக்கொண்டும், மாவட்டக்குழுவின் தீர்மானத்திற்கேற்ப எல்லா கிளைக் கழகங்களும் மாதமிருமுறை பிரச்சாரக் கூட்டம்நடத்தவேண்டுமென வலியுறுத்தியும்,பட்டிமார்புகைத்தறியாளர் அவல நிலையைப் போக்க ஒவ்வொரு கிளைக் கழகமும் 19—6—55ல் கூடி அவர்கள் குறையை போக்க முயலாத அரசாங்கத்தின் போக்கைக் கண்டித்துத் தீர்மானங்கள் நிறைவேற்றி, நகல் ஒன்றை வட்டக் குழுவிற்கு அனுப்பிவைக்க வேண்டுமெனவும் தீர்மானிக்கப்பட்டது.

கன்னிவாடியில் தி. மு. கழகப் பொதுக் கூட்டம்

30—5—55 மாலை 5 மணிக்கு, அழகிரி திடலில், தாரை தி. மு. கழக வட்டக் குழுவின் சார்பில், தோழர் ஒ. எஸ். ராமசாமி தலைமையில் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில், தோழர் கோவை-செழியன் சமுதாய நிலை குறித்து சொற்பொழிவாற்றினார். இறுதியில் தோழர் சி. பி. சிற்றரசு அவர்கள் இன்றைய அரசியல் நிலை குறித்து விரிவுரையாற்றினார்.

அன்று இரவு 10 மணிக்கு கே. எஸ். எஸ். கலைமன்றத்தாரால் 'தூக்குமேடை' நாடகம் தோழர் சி. பி. சிற்றரசு தலைமையில் நடைபெற்றது.

தாத்தையங்கார்பேட்டை தி. மு. க. பொதுக் கூட்டம்

5—6—55 மாலை 7 மணிக்கு தாத்தையங்கார்பேட்டை சந்தைத் திடலில் தோழர் எம். எஸ். என். இராசன் தலைமையில் நடைபெற்ற கழகப் பொதுக் கூட்டத்தில், தோழர்கள் இ. பரசுராமன், க. அய்யாவு, பெ. முருகேசன், மு. பெ. முத்துக்கருப்பன் ஆகியோர் பேசியபின், சிற்றுளி-சுப்பிரமணியம் சமுதாயம்—அரசியல்—பொருளாதாரம் ஆகியவை பற்றி விரிவுரையாற்றினார். இறுதியில் தி.மு. கழகப் புதிய பொதுச் செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்களை பாராட்டியும், வரவேற்றும், அண்ணா அவர்களுக்கு நன்றி தெரிவித்தும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. கூட்டத் துவக்கத்தில் தி. மு. கழகக் கொடியை தோழர் சிற்றுளி-சுப்பிரமணியம் சந்தைத் திடலில் [illegible]

போர்ச்சுகீசிய சர்க்காரின் வெறிச் செயல்!

போராட்ட வீரர்களுக்கு சவுக்கடியாம்

4-வது போராட்டக் குழுவினர் கைது

கோவா, ஜூன் 10—
கோவா எல்லைக்குள் இன்று காலை நுழைந்த நான்காவது சத்தியாக்கிரகக் குழுவும் போர்ச்சுகீசியப் போலீசாரால் கைது செய்யப்பட்டு விட்டது என்று தெரிய வந்துள்ளது.

இந்தக் குழு இராஜாராம் பட்டீல் என்பவர் தலைமையில் நடத்திச் செல்லப்பட்டது.

குழுவிலிருந்த அனைவரும் போர்ச்சுகீசியப் போலீசாரால் பலமாக உதைக்கப்பட்டிருக்கின்றனர். பலமான அடிபட்டதின் காரணமாக, கோபாலன் எனும் சத்தியாக்கிரகி ஒருவர், பலமான காயங்களுடன் மருத்துவ மனையில் பிரக்ஞையற்றுக் கிடப்பதாகத் தெரிகிறது.

40 சத்தியாக்கிரகிகள் மீண்டும் எல்லையோரத்தில் கொண்டுவந்து விடப்பட்டுள்ளதாக இறுதியாகக் கிடைத்த தகவல்கள் தெரிவிக்கின்றன.

அந்த சத்தியாக்கிரகிகளுக்குக் குடிக்க தண்ணீர் கூடக் கொடுக்காமல் போர்ச்சுகீசிய சர்க்கார் அவர்களைச் சவுக்கால் அடித்துத் துன்புறுத்தியதாக சத்தியாக்கிரகிகள் தெரிவித்திருக்கின்றனர்.

★

'ஒன்றுபட்டு எதிர்க்க வேண்டும்'

பம்பாய்—
"கோவாவின் விடுதலைக்காகப் போராடும் எல்லா கோவா அரசியல் கட்சிகளும் ஒன்று சேர்ந்து ஐக்கியமாகப் போர்ச்சுகீசியரை எதிர்க்கவேண்டும்," என்று இந்திய சர்க்கார் அயல் நாட்டு துணை அமைச்சர் மஹமூத், கோவா தேசிய யூனியன் சார்பில் தம்மைச் சந்தித்த தூதுக் குழுவினரிடம் கூறியிருக்கிறார்.

கோவாப் பிரதேசத்தின் உள்ளிருந்துகொண்டு கோவா மக்களும், அதற்கு வெளியே இந்திய மக்களும் வெகு துரிதமாக இயக்கத்தை நடத்தவேண்டியது அவசியம் என்று தூதுக் குழுவினர் அவரிடம் வற்புறுத்தினர் என்று தெரிகிறது.

★

போர்ச்சுகீசியரின் குற்றச்சாட்டு

லண்டன்—
"கோவா போர்ச்சுகீசிய சர்க்காரின் நடவடிக்கைகளுக்கு எதிரான ஆர்ப்பாட்டங்களில் இந்தியா கலந்துகொள்ளப் போவதில்லை என்ற கொள்கையை இந்தியப் பிரதமர் நேரு பண்டிதர் மாற்றிக் கொண்டுவிட்டதாக லண்டனில் உள்ள போர்ச்சுகீசியத் தூதுவராலயம் குற்றம் சாட்டியிருக்கிறதாம்.

கோவாவின் எல்லைக்குள் ஏராளமான இந்தியர்கள் நுழைவதைத் தாம் ஆதரிக்கவில்லை என்றாலும், கோவாவிற்குள் நுழைவதற்கு இந்தியர் உரிமையுடையவரே என்று நேரு பண்டிதர் அண்மையில் கூறியிருந்ததை மேற்படி தூதுவராலயம் கண்டித்து அறிக்கை ஒன்று விடுத்திருந்தது. அந்த அறிக்கையில் 'நேரு பண்டிதரின் போக்கு அகில உலகச் சட்டத்திற்குப் புறம்பானது—முரணானது' என குறிப்பிடப்பட்டிருந்தது.

★

விடுதலை இயக்கத்தவருக்கு சிறைத் தண்டனை

கோவா தேசியவாதி திருமதி கிருஷ்ணபாய் தியூகாருக்கு கோவா நீதி மன்றம் 4 மாத சிறைத் தண்டனையும், தினம் ஒன்றுக்கு 10 'எஸ்கியூடோஸ்' (போர்ச்சுகீசிய நாணயம்) அபராதமும் விதித்துத் தீர்ப்புக் கூறியிருக்கிறது. இது தவிர, அவருக்கு 3 ஆண்டுகளுக்கு 'சிவில் உரிமை' கிடையாதென்றும், இரண்டாண்டு காலம் அவர் போலீஸ் கண்காணிப்பில் இருக்க வேண்டும் என்றும் உத்தரவிடப்பட்டிருக்கிறது.

வித்தோ பால்முன்கான் கா என்பவருக்கும், சரத் பாலகிருஷ்ணு என்பவருக்கும் தலா ஓராண்டு சிறைத் தண்டனையும், மற்றும் நால்வருக்கு 3 ஆண்டுகள் முதல் 4 ஆண்டுகள் வரை சிறைத்தண்டனையும் விதிக்கப்பட்டிருக்கிறது.

தி.மு.க. மாநில மாநாட்டு நிதிக்காக

சிறப்புச் சொற்பொழிவு

12—6—55 காலை 10 மணிக்கு பூந்தமல்லி விக்னேஸ்வரா டாக்கீசில், தி.மு.கழக 2-வது மாநில மாநாட்டு நிதிக்காக தோழர் கே. டி. எஸ். மணி தலைமையில், தோழர் சி. என். அண்ணாதுரை அவர்கள், 'உலகத்தைத் திருத்திய உத்தமர்கள்' என்னும் பொருள் பற்றி சொற்பொழிவாற்றுவார்.

நன்கொடை: ரூ. 1, அணா 8, 4.

சொற் பயிற்சிக் கூட்டம்

12—6—55 காலை 10 மணிக்கு, சென்னை, பெரம்பூர், எண் 32, ஸ்டாரான்ஸ் ரோடு, திரு. வி. க மறுமலர்ச்சி மன்றத்தில், தோழர் ந. கோவிந்தன் தலைமையில் நடைபெறும்.

பிரிட்டிஷ் கயானாவில் மீண்டும் மக்களாட்சி

வற்புறுத்த தூதுக் குழுக்கள் செல்லும்

ஜார்ஜ்டவுன், ஜூன் 9—
பிரிட்டிஷ் கயானாவில் ரத்து செய்யப்பட்ட அரசியல் சட்டத்தை மீண்டும் அமுல் செய்யவும், சிக்கிரமாகவே தேர்தலை நடத்தவுமான காரியங்களைச் செய்யுமாறு வற்புறுத்துவதற்காக, மக்கள் முன்னேற்றக் கட்சியின் தூதுக் குழு ஒன்று வரும் ஜூலை, ஆகஸ்டில் இங்கிலாந்து சென்று பிரிட்டிஷ் மந்திரிகளைச் சந்திக்கும் என்று தெரியவருகிறது. லாவோகமசிங்கம், பர்ன்ஹாம், ஜெய்நாராயன் சிங் ஆகிய கயானாவின் முன்னாள் மந்திரிகள் தூதுக்குழுவில் இடம் பெற்றிருப்பர் என்று தெரிகிறது.

அத்தூதுக் குழுவினர், தாங்கள் திரும்பும் வழியில் அமெரிக்கா வந்து வருவதற்கும் அனுமதி கோருவதென எண்ணியிருக்கின்றனராம்.

மக்கள் முன்னேற்றக் கட்சிக்கு எதிரான ஐக்கிய ஜனநாயகக் கட்சியினர், கட்சித் தலைவரான ஜான் கார்டெர் பார் - அட் - லாவின் தலைமையில் வேறொரு தூதுக் குழுவையும், கயானாவில் தேர்தலை வரும் 1956 நவம்பருக்குள் நடத்திவிட வேண்டுமெனக் கோருவதற்காக, இங்கிலாந்து மந்திரி சபையைச் சந்திக்க அனுப்புவர் என்றும் தெரிய வருகிறது.

மக்கள் முன்னேற்றக் கட்சி, ஐக்கிய ஜனநாயகக் கட்சி ஆகியவற்றின் தலைவர்கள், கயானாவில் இன்னும் 10 ஆண்டுகளுக்கு தேர்தலே இல்லாமல் செய்துவிட முயற்சிகள் நடப்பதாகக் கூறினர்.

மக்கள் முன்னேற்றக் கட்சியின் சார்பில் பிரதமராயிருந்த செட்டி ஜகன், எந்தவிதத் தேர்தல் நடைபெறுவதிலும் நிச்சயமாக ஆர்வங் கொண்டிருக்கவில்லை என்று தெரிய வருகிறது.

நகர அபிவிருத்திக்கு நிதி ஒதுக்க!

மத்திய சர்க்காரை வற்புறுத்துவர்!

கல்கத்தாவில் மூன்று நகர 'தந்தை'கள் மாநாடு

கல்கத்தா, ஜூன் 9—
தங்கள் தங்கள் நகரை அபிவிருத்தி செய்வதற்காக இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டத்தின் கீழ் பெரும் அளவு பணம் ஒதுக்க வேண்டுமென மத்திய அரசாங்கத்தை வற்புறுத்துவதற்காக சென்னை, பம்பாய், கல்கத்தா நகரங்களின் 'மேயர்'கள், மாநாடு ஒன்றில் கூடிப் பேசுவர் என்று தெரிகிறது.

மாநாடு கல்கத்தாவில் நடைபெறக்கூடும் என்று தெரிகிறது.

'இந்த நடவடிக்கை அத்தியாவசியமானது' என்று கருதப்படுவதற்குக் காரணம், ஏற்கனவே பல மாநில சர்க்கார்கள், தங்கள் நகர அபிவிருத்திக்கு பண உதவி எதும் செய்ய முடியாதென அறிவித்து விட்டதேயாம்!

பள்ளியை அழித்த முல்லாக்கள்

கோரிக்கை நிராகரிக்கப்பட்டதே காரணமாம்

காக்ஸ் பசார், ஜூன் 10—
இங்குள்ள பள்ளியின் விழாவின்போது, ஒரு குறிப்பிட்ட நாட்டியப் பெண்ணின் நடனம் நடைபெறக் கூடாதென்பதற்காக, அங்குள்ள சுமார் 300 கிழக்கு பாகிஸ்தான் முல்லாக்கள் அந்தப் பள்ளியையே 'துவம்சம்' செய்து விட்டனர் என செய்தி ஒன்று கூறுகிறது.

அந்தக் குறிப்பிட்ட பெண்ணின் நடனம் நடைபெறக் கூடாதென ஆட்சேபித்ததற்கு அவரின் நடனம் மிக 'ஆபாசகரமானது' என்பதே காரணமாம்!

ஆனால் இந்த ஆட்சேபனை பற்றி அப்பள்ளி மாணவர் தலைவர்கள், பள்ளி அதிகாரிகளுடன் கலந்தாலோசித்த பின்னர், மேற்படி முல்லாக்களின் ஆட்சேபனையை அவர்கள் நிராகரித்துவிட்டனராம்.

தங்கள் கோரிக்கை நிராகரிக்கப்பட்டது கண்டு கோபாவேசமுற்ற அந்த முல்லாக்கள், பள்ளியினுள் புகுந்து, அங்கிருந்த பள்ளியின் தஸ்தாவேஜுகளையும், புத்தகசாலைப் புத்தகங்களையும் கிழித்தெறிந்ததுடன், அங்கு வைக்கப்பட்டிருந்த நாடகக் கருவிகளையும், அமைக்கப்பட்டிருந்த நாடக மேடையையும் உடைத்தெறிந்தனராம்!

'காமன்வெல்த்' நாடுகளில்

சர்க்கரை உற்பத்தி

காமன்வெல்த் நாடுகளில் 1954-55-ம் ஆண்டில் சர்க்கரை உற்பத்தி அதிகரித்திருப்பதாக லண்டனிலுள்ள சர்க்கரைத் தரகு நிறுவனம் ஒன்றின் அறிக்கை கூறுகிறது. பொதுவாக 1954-55-ம் ஆண்டு பருவத்தில் கரும்பு விளைச்சலும் அதிகமே என்று தெரிகிறது 1954-55ல், 92,30,000 டன் சர்க்கரை காமன்வெல்த் நாடுகளில் உற்பத்தி செய்யப்பட்டது. இதில் இந்தியா—பாகிஸ்தான் நாடுகளில் 53,00,000 டன் சர்க்கரை உற்பத்தி செய்யப்பட்டது.

கழகக் கூட்டங்கள்

★

மாதவரம்
மங்குத்துரை தோட்டம்
தேசிங்கு அரங்கில்
12—6—55 மாலை 5 மணிக்கு
தலைவர்: எம். ஈ. பாண்டியன்
பேசுவோர்:
சி. என். அண்ணாதுரை
ஏ. கே. சாமி எம்.சி.
அ. செயராசு
மா. பொ. வேதாச்சலம்

குறிப்பு: கூட்டத்தில் தோழர் சி. என். அண்ணாதுரை அவர்களிடம் மாநில மாநாட்டுக்கு நிதி அளிக்கப்படும்.

★

மேட்டூர்
ஜனசேவா சங்க மைதானத்தில்
13—6—55 மாலை 6½ மணிக்கு
தலைவர்: அ. பாலு
பேசுவோர்:
அருண்மொழி
க. கு. சின்னசாமி

★

கோணலூர்
பாடசாலை முன்புறம்
14—6—55 மாலை 6 மணிக்கு
தலைவர்: அருணகிரி
பேசுவோர்:
ப. உ. சண்முகம்
இராமலிங்கம்
கலீல்

★

சேலம்
வி. மார்க்கெட்டில்
14—6—55 மாலை 6 மணிக்கு
தலைவர்: ஏ. மாரியப்பன் எம்.சி.
பேசுவோர்:
அருண்மொழி
ஈ. ஆர். கிருஷ்ணன்
சிற்றுளி சுப்பிரமணியம்
கே ஏ. வெங்கடாசலம்

கடைச் சிப்பந்திகள் விடுமுறை

சர்க்கார் உத்தரவு

சென்னை, ஜூன் 10—
கடை, அல்லது வேறு ஏதாவது ஒரு தனிப்பட்ட நிறுவனம் ஆகியவற்றின் உரிமையாளரைத் தவிர மூன்று, அல்லது அதற்கும் குறைவான சிப்பந்திகள் பணியாற்றுவதாக இருந்தால், அந்த நிறுவனத்திற்கு கடைச் சிப்பந்திகள் சட்டத்தின் சில விதிகளினின்றும் ஓராண்டிற்கு விதிவிலக்களித்து சர்க்கார் உத்திரவு பிறப்பித்திருக்கின்றனர்.

எந்த வியாபார நிறுவனத்திலும் ஊழியம் செய்யும் சிப்பந்திகள் ஒவ்வொருவருக்கும் வாரத்தில் ஒரு நாள், சம்பளத்துடன் விடுமுறை கொடுக்கவும், எவருமே வாரம் ஒன்றில் 6 நாட்களுக்கு மேற்பட்டு தொடர்ந்து வேலை செய்யக் கூடாது என்றும் ஒரு சம்பளப் பட்டியல் புத்தகமும், பார்வையாளர் குறிப்புப் புத்தகம் ஒன்றும் ஒவ்வொரு நிறுவனத்திலும் வைக்கப்பட வேண்டும் என்ற மேற்குறிப்பிட்டுள்ள நிபந்தனைகளின் பேரில் அந்த நிறுவனங்களுக்கு மேற்படி விதிவிலக்குச் செய்யப்படுமாம்.

திபெத் நாட்டிற்கு இந்திய அரிசி

சிலிகரி, ஜூன் 10—
இந்தியா-சீனா வர்த்தக ஒப்பந்தப்படி, திபெத்திற்கு ஏற்றுமதி செய்வதாக இந்தியா ஒப்புக்கொண்டிருந்த 2,200 டன் அரிசியின் ஒரு பகுதியாக 1,800 டன் அரிசி ஏற்றுமதி செய்யப்பட்டிருக்கிறது என்று தெரியவருகிறது.

திபெத்திற்கு அரிசி போய்ச் சேர்வதில் உதவுவதற்காக இந்திய சர்க்காரின் உணவிலாகா அதிகாரி ஒருவர் நியமிக்கப்பட்டிருக்கிறார்.

தோழர்

கே. கே. நீலமேகம்

சென்னை, ஜூன் 11—
குடந்தை தோழர் கே. கே. நீலமேகம் அவர்கள், வியாபாரத்தின் பொருட்டு குண்டூர் பகுதிகட்குப் போய், ஒரு மாதம் வரை தங்கியிருந்து இன்று சென்னை வந்து சேர்ந்தார். அண்ணா அவர்களைப் பார்த்துப் பேசிய பிறகு, 13-6-55 இரவு மெயிலில் கும்பகோணம் செல்லக்கூடும்.

பெயர் சூட்டல்

தோழர் காஞ்சி கல்யாணசுந்தரம் அவர்களின் காலஞ் சென்ற குமாரன் ராமு என்கிற அருணாசலத்தின் ஆண் மகவுக்கு, 10-6-55 வெள்ளியன்று, அண்ணா அவர்களால், 'மதியழகன்' எனப் பெயர் சூட்டப்பட்டது.

திருச்சி மாவட்ட தி. மு. கழகக் கிளைச் செயலாளர்கட்கு

"**22-5-55** அன்று, திருச்சியில் நடைபெற்ற திருச்சி மாவட்ட தி.மு. கழகச் செயற் குழு முடிவுப்படி, நமது மாவட்ட மாநில மாநாட்டு நிதிப் பங்கு ரூ. **2,000**-ஐயும், **19—6—55**-ல் திருச்சிக்கு பொதுச்செயலாளர் அவர்கள் வரும்போது அவரிடம் கொடுக்கவேண்டியிருப்பதால், ஒவ்வொரு கிளைக் கழகத்திற்கும் விதிக்கப்பட்டுள்ள தொகையை **15-6-55**-க்குள் அனுப்பிவைக்க வேண்டுகிறேன்,"

என, திருச்சி மாவட்ட தி.மு.கழகச் செயலாளர் தோழர் அ பெ. தர்மலிங்கம் அறிவிக்கிறார்.

குறிப்பு: வசூல் செய்துள்ள கிளைகள் உடனடியாக அனுப்ப வேண்டுகிறேன்.

திருமணங்கள்

12—6—55 காலை 8 மணிக்கு, சென்னை, திருவொற்றியூர் அடுத்த மணலி கிராமம், எண் 2/29, வேணுகோபால்கீழண்டை வீதியில், தோழர் காஞ்சி கல்யாணசுந்தரம் தலைமையில், தோழர் டி. துரை—தோழியர் கமலா, தோழர் எஸ். நடராசன்—தோழியர் உமயவள்ளி திருமணங்கள் நடைபெறும், தோழியர்கள் பூங்கோதை, தேசியமணி ஆகியோர் பேசுவர்.

* * *

12—6—55 காலை 9 மணிக்கு. சென்னை, மயிலாப்பூர், மாதவராவ் கார்டன் ஜி தனபால் இல்லத்தில், தோழர் காஞ்சி கல்யாணசுந்தரம் தலைமையில், தோழர் என். சுப்பரமணி—தோழியர் கௌரிபாய் திருமணம் நடைபெறும். தோழர்கள் சி. ஆர். பாலசுந்தரம், கலைச்செழியன், வேந்தன் ஆகியோர் சொற்பொழிவாற்றுவர்.

சி. பி. சிற்றரசு

சுற்றுப்பயணம்

ஜூன் 14: சென்னை (மூலக்கடை)
15: சென்னை (நேபியர் பார்க்)
17: தக்கோலம்
18: அரக்கோணம்
19: கொல்லுமாங்குடி
20: திருவிளையாட்டம்
21: காளி

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம். ஏ., அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப் பெற்று, (24, சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம் சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: இரா, நெடுஞ்செழியன், எம். ஏ.